01.07.2026

அ.வ.எண். 113/2024

வா.சா.1 – திரு. அகத்தீஸ்வரன், த/பெ. வெங்கடாசல கவுண்டர்

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 01.07.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பொழியில் சிவகாமி ஓலையை போடுகிறார். என் அப்பாவுக்கு தண்ணீர் வந்த PAP வாய்க்காலை அழித்து விட்டார். சிவகாமி ஓலையை போடுகிறார் என வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள சொத்து விவரம் வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களின் அடிப்படையில் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணத்தில், PAP வாய்க்கால் குறித்து சொல்லவில்லை என்றால் சரிதான். PAP வாய்க்கால் வந்தது முதல் உள்ளது.

2. வா.சா.ஆ.2 பரிவர்த்தனை ஆவணத்தில், சின்னம்மாள், அகத்தீஸ்வரன், மரகதம், கிருஷ்ணவேனி, ஜோதிலட்சுமி, ராமசாமி ஆகியோருக்கு இடையே ஏற்பட்ட பரிவர்த்தனை மட்டும் தான் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில், 1ம் பிரதிவாதியின் கணவர் சிதம்பரசாமி தரப்பினராகவோ அல்லது சாட்சியாகவோ இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பரிவர்த்தனை ஆவணமானது, சிதம்பரசாமி மற்றும் ராமசாமிக்கு இடையே ஏற்பட்டது என்றால் சரிதான். அதில் நான் தரப்பினர் அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.2 மற்றும் 3 பொது ஷராவில் உள்ளதை தான் தாவாவில் சொத்து விவரமாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

3. மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களின் பொதுஷராவில், தாவா சொத்து விவரத்தில் சொல்லியுள்ள க.ச.எண்.597/2B, 597/2C1, 578/3C காலைகள் மற்றும் அதில் உள்ள பாத்தியங்கள் சகிதம் என இல்லை என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களின் பொதுஷராவில் குறிப்பிடாத க.ச.எண்.597/2B, 597/2C1, 578/3C ஆகிய காலைகள் பொதுஷராவில் இல்லாத

காரணத்தால் அந்த காலைகளை பொறுத்து பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. என் அப்பாவுக்கு வா.சா.ஆ.1 பாகப்பிரிவினை ஆவணம் மூலமாக வந்த சொத்தை பொறுத்து தான் வழக்கு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

4. என் அப்பாவுக்கு பாகப்பிரிவினை மூலம் வந்த சொத்துக்களை பொறுத்து நாங்கள் எங்களுக்குள் பாகம் செய்து கொள்ளவில்லை என்றால் வா.சா.ஆ.2 பரிவர்த்தனை மூலமாக ஏக்கர் 1.18 ½ சென்ட் முழுவதுமாக எழுதி கொடுத்துவிட்டனர். மற்ற சொத்துக்கள் பொதுவாக உள்ளது. பரிவர்த்தனை மூலமாக ஏக்கர் 1.18 ½ சென்ட் முழுவதுமாக எழுதி கொடுத்துவிட்டனர் என வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள பொதுஷராவில் உள்ள சொத்துக்கள் எனக்கு மட்டுமே பாத்தியம் என்றும் சின்னம்மாள் வகையறாவுக்கு சம்மந்தமில்லை என்றால் சரிதான்.

5. வா.சாஆ.2 பரிவர்த்தனை ஆவணத்தில் உள்ள சரத்துக்களுக்கும், 1ம் பிரதிவாதிக்கும் சம்மந்தமில்லை என்றால் சரிதான். எனவே, வா.சாஆ.2 பரிவர்த்தனை ஆவணத்தில் உள்ள சரத்துக்களை 1ம் பிரதிவாதி சம்மந்தமில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் சம்மந்தம் உள்ளது என சாட்சியம் அளிக்கிறார். 1ம் பிரதிவாதி ஒப்பந்தத்தை மீறி நெடுஞ்சாலைத்துறை, சாலை PAP வாய்க்கால், ஊராட்சி சாலைகள், இவற்றின் கீழே நெடுஞ்சாலை, பொதுப்பணித்துறை, ஊராட்சி ஒன்றியம் ஆகிய துறைகளில் அனுமதி இல்லாமல் க.ச.எண்.554/2B, க.ச.எண்.553/2B பைப் லைன் அமைத்துள்ளார் என சொல்லியுள்ளேன். அது சம்மந்தமாக புகார் கொடுத்துள்ளேனா என்றால் கிராம நிர்வாக அலுவலர் முதல் மாவட்ட ஆட்சியர் வரை புகார் கொடுத்துள்ளேன்.

6. நான் வருவாய் ஆய்வாளரிடம் புகார் கொடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். வட்டாட்சியரிடம் புகார் கொடுத்ததற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.10 நில வருவாய் ஆய்வாளரிடம் கொடுத்த புகாரில், 1ம் பிரதிவாதி சட்டத்தை மீறி எந்தெந்த காலைகளில் குழாய் பதித்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய பூமி சற்று மேடான பகுதி என்றும், 1ம் பிரதிவாதியின் பூமி சற்று

பள்ளமாகவும் இருக்கும் என்றால் சமமாக உள்ளது. வாய்க்கால் எனது பூமிக்கு வரும்போது மேடாக இருக்குமா என்றால் வாய்க்கால் மேடாக இருக்கும், அதன் பெயரே மேட்டு வாய்க்கால் ஆகும்.

7. வா.சா.ஆ.14 உதவி செயற்பொறியாளர் அவர்களுக்கு நான் அனுப்பிய கடிதத்தில் 1ம் பிரதிவாதி PAP வாய்க்காலை எந்த இடத்தில் அழித்தார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். PAP வாய்க்கால் பிரச்சனை ஏற்பட்டால் அது சம்மந்தமாக விவசாய பாசன சங்கத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்றால் சரிதான். விவசாய பாசன சங்கத்தில் எடுக்கும் முடிவே இறுதியானது என்றால் சரிதான். அவ்வாறு நான் விவசாய பாசன சங்கத்தில் புகார் அளித்தேனா என்றால் ஆமாம். மேற்படி புகாரின் நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. PAP வாய்க்காலில் தண்ணீர் பாய்ச்சுவது சம்மந்தமாக பிரச்சனை ஏற்பட்டால் சிவில் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை என்றால் PAP JE, வட்டாட்சியர் ஆகியோரிடம் பேசினேன், அவர் ஒருதலைபட்சமாக பேசினர். நான் நீதிமன்றத்திற்கு செல்கிறேன் என சொல்லிவிட்டு வந்தேன். வட்டாட்சியர் விசாரணை செய்தார். வட்டாட்சியர் இறுதி உத்தரவு பிறப்பித்தாரா என்றால் இல்லை. PAP JE, விசாரணை செய்து இறுதி உத்தரவு பிறப்பித்தாரா என்றால் இல்லை. அவரால் முடியவில்லை என்றும், நீதிமன்றத்திற்கு செல்லுமாறு சொன்னார். நான் சொல்வது போல் நடைபெறவில்லை என்றும், விசாரணை நிலுவையில் உள்ளபோது நானாக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று அங்கு முடியாமல் இறுதியாக நீதிமன்றத்திற்கு வந்தேன்.

9. காவல் நிலையத்தில் 1ம் பிரதிவாதியை மிரட்டி கையொப்பம் பெற்றனர் என்றால் இல்லை. வா.சா.ஆ.6 பொது ஒப்பந்தத்தின், பொது ஷராவில் அகத்தீஸ்வரன், சாராதா, சிவகாமி ஆகியோருக்கு பொதுவாக உள்ள தடத்தை அளந்து கற்கால்களை நட்டி கொள்ள வேண்டும் என சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு இன்று வரை அளந்து கல் நடவில்லை என்றால் சரிதான்.

பிரச்சனை உள்ளது. வா.சா.ஆ.10 ஆவணத்தின் 2ம் பக்கத்தில், மேலே உள்ள கையெழுத்தும், கீழே உள்ள கையொப்பமும் வேறுபடுகிறது என்றால் இல்லை.

10. நான் எனக்கு ஏற்றவாறு பின்னிட்டு வாசகங்களை ஏற்படுத்தி கொண்டேன் என்றால் சரியல்ல. PAP வாய்க்கால் மற்றும் பொதுத்தடத்தை அழித்து விட்டனர் என நீதிமன்றம் மூலமாக ஆணையரை நியமித்து வழக்கு சொத்தை அளந்து பார்த்தனரா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையரை அழைத்து சென்றால் இவ்வழக்கிற்கு விரோதமாகிவிடும் என்பதால் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வட்டாட்சியர் மற்றும் விவசாய பாசன சங்கம் இறுதி உத்தரவு பிறப்பிப்பதற்கு முன்பாக வழக்கு தாக்கல் செய்து, 1ம் பிரதிவாதியை அலைக்கழிப்பு செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு மற்றும் என் சகோதரி வகையறா தாக்கல் செய்த அ.வ.எண்.114/2014 வழக்கின் சொத்து விவரம் ஒன்றுதான் என்றால் சரிதான்.

11. மேற்படி இரு வழக்கிலும் கேட்டுள்ள பரிகாரம் ஒன்றுதான் என்றால் என்னுடைய சொத்திற்கு நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன், அவர்களுடைய சொத்திற்கு அவர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளனர். 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரவில்லை என்றால் கோரியுள்ளேன். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, பாசன சங்கத்தின் தலைவர் கோவிந்தராஜ் என்பவர் பேசி தண்ணீர் வந்தது என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு, PAP வாய்க்கால் வழியாக தண்ணீர் பாய்ந்தது என்றால் ஒரு முறை தண்ணீர் பாய்ந்தது. மற்றொரு முறை தண்ணீர் பாய்வதை தடுத்துவிட்டார். அவ்வாறு 2வது முறை தடுத்தது சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் PAP தலைவரிடம் சொன்னேன். நான் சொல்வது போல் 1ம் பிரதிவாதி வாய்க்காலை அடைக்கவில்லை என்றும், பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

12. வழக்கு நிலைக்க வேண்டி 1ம் பிரதிவாதி வாய்க்காலை அடைத்துவிட்டார் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் கணவர் சிதம்பரசாமி வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவருக்கு அவரது மனைவி சிவகாமி மற்றும் இரு

வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். சிதம்பரசாமியின் வாரிசுகளை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மட்டும் இடையூறு செய்தார் அதனால் அவரை சேர்த்துள்ளேன். நானும், என் மகனும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். எனக்கும், பிரதிவாதிகளுக்கும் பூமி வீசன பகுதி என்றால் முதலில் இருந்தது, தற்போது இல்லை.

13. நான் வழக்குரையில் பத்தி 17 ல் சொன்னது போல் மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். பொது வண்டித்தடம் எந்தெந்த காலைகளில் உள்ளது என்றால் க.ச.எண்.578 காலையில் உள்ளது. மேற்படி பொது வண்டித்தடமான க.ச.எண்.578 காலையானது எத்தனை நபர்களுக்கு பாத்தியம் என்றால் ராமசாமி, அகத்தீஸ்வரன், சிதம்பரசாமி ஆகியோருக்கு பாத்தியம். சிதம்பரசாமியின் வாரிசு சிவகாமி என்றால் சரிதான். க.ச.எண்.578 காலையை பொதுத்தடம் என்பதற்கு வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

14. வருவாய் ஆவணம், சிட்டா, புலப்படம் ஆகியவை தாக்கல் செய்யாததால் நீதிமன்றம் இறுதியான முடிவிற்கு வர முடியாது என்றால் சரியல்ல. PAP வாய்க்காலில் எந்தெந்த காலைகளில் சேதப்படுத்தினார் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur